# உள்ளத்திலிருந்து



## உங்களுக்காக.....



அன்பர்களே,



தேசத்தின் குடிமக்களைக் காத்திட அரசு கொண்டுவந்த அரிய முயற்சியே மனித உரிமைகள் பாதுகாப்பு சட்டம் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஜனநாயக நாட்டின் குடிமக்களே எஜமானர்கள் என்பதையே இந்த சட்டங்கள் வலியுறுத்துகிறது. மக்களின் பிரஜா உரிமைகளை காப்பதே மனித உரிமை சட்டம். விரிவான விளக்கம் உள்ளே கட்டுரை தொகுப்பில் காணலாம்.

தகவல் அறியம் உரிமைச்சட்டம் என்பது அரசுத்துறைகளின் நிர்வாகங்கள் எவ்வித ஒழிவு மறைவின்றி திறந்த புத்தகமாக மக்கள் அறிந்து கொள்ள ஏதுவாய் ஏற்படுத்தப்பட்டதே. எனினும் மனித உரிமையை பயன்படுத்திக் கொள்ள எவ்வாறு வரைமுறை உண்டோ அதைப்போல தகவல் அறியும் உரிமைச்சட்டத்திற்கு வரம்பு உண்டு என்பதையும் நினைவில் கொள்ளவும், ஆனாலும் குடிமக்களான பொதுமக்களாகிய நமக்கு இச்சட்டங்கள் கிடைப்பதற்கரிய ஓர் வரப்பிரசாதம் என்றால் அது மிகையல்ல. எனவே அதனை ஒவ்வொருவரும் அறிந்துகொண்டு பயன்பெற வேண்டும் என்ற சீரிய முயற்சியே இந்த ‘தகவல் வழிகாட்டி’ வெளியிட காரணமாகும்.

அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது மானுடவாழ்வு உன்னதமானது அதனை சொர்க்கமாக்குவதும், நரகமாக்குவதும், நாம் எடுக்கின்ற முடிவுகளை பொறுத்தே அமைகிறது. எனவே மனித நேயம் வளர்ப்போம் சக மனிதர்களோடு சகோதர பாசத்தோடு பழகுவோம்! வாழும் காலம் மிகமிக குறைவானது.

அந்த காலத்தினை பயனுள்ளதாக பிறர்க்கும் பயனுள்ள வகையில் வாழ்வோம். மானுட சமுத்திரம் நாம் என்று கூறி மானுடம் வெல்லட்டும் என்ற வாழ்த்துக்களுடன். என்றும் மனிதத்தை நேசிக்கும்

உங்கள் அன்பன்


**கே.வி. துரை** **மதுரை**

தொகுப்பாசிரியர் செல்: 99441 53750.

**N.S.V. சித்தன்**

நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்

**திண்டுக்கல் தொகுதி**

24, 3வது முக்கிய வீதி,
நேருஜி நகர்,
**திண்டுக்கல் – 624 001**
தொலைபேசி : **0451 2434906**

**திருமங்கலம்**

**11.07.2011**

## வாழ்த்துச் செய்தி

தகவல் அறியும் உரிமைச் சட்டம் இந்தியப் பேரரசின் ஆட்சிக்கட்சியாக உள்ள ஐக்கிய முற்போக்கு கூட்டணியால் உருவாக்கப்பட்ட மிக அற்புதமான சட்டமாகும். அரசு நிர்வாகத்தில் நடைபெறும் பல்வேறு விவரங்களைச் சாதாரண மக்கள் அறிந்து கொள்ளக் கூடிய அரிய அற்புதமான கருவியாகும். நம் நாட்டில் உள்ள யாரும் அரசு அலுவலகங்களுக்குச் சென்று நிர்வாகத்தில் நடைபெறும் வரவு செலவு விவரங்கள் மற்றும் நிர்வாகத்தில் உள்ள பல்வேறு சந்தேகங்கள் குறித்த விவரங்களை குறித்த காலவரையறைக்குள் பெற்றுக் கொள்ளலாம் அப்படி தகவல் தராத அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்கும். நமது ஜனநாயகத்தில் சாதாரண மக்களுக்குக் கிடைத்துள்ள வலிமையான ஆயுதமாகும் இந்த சட்டம்.

**“தகவல் வழிகாட்டி”** எனும் இந்த புத்தகத்தில் நமது நாட்டில் உள்ள பல்வேறு மாநிலங்களைப் பற்றிய விவரங்களும் 2011 ஆம் ஆண்டு அமையப்பெற்ற தமிழக சட்டமன்ற பேரவை அமைச்சர்கள், உறுப்பினர்கள் பற்றிய விவரங்களும் இடம் பெற்றுள்ளன. தகவல் அறியும் உரிமைச்சட்டம் பற்றிய **“தகவல் வழிகாட்டி”** எனும் இந்த பயனுள்ள புத்தகத்தை வெளியிட்டுள்ள தொகுப்பாசிரியர் **திரு.கே.வி. துரை** நமது பாராட்டுக்குரியவர். அவரின் நன் முயற்சிகள் வெற்றியடைய எமது நல்வாழ்த்துக்கள்.

அன்புடன்,

**இல்லம்:**: 34, இந்திரா காந்தி தெரு, ஜவகர் நகர், திருமங்கலம் - 625 706

தொலைபேசி : **04549 282776**

NYK Code No. 5904

# இந்திய அரசு

**இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு அமைச்சகம்**

# நேரு யுவ கேந்திரா

மதுரை மாவட்டம்



**K.ஜவஹர் M.A.B.L.,**
**மாவட்ட இளைஞர் ஒருங்கிணைப்பாளர்**

## வாழ்த்துச் செய்தி

மக்களாட்சி வெற்றிகரமாக இயங்குவதற்கு ஒரு முக்கிய தேவை ஒரு வாக்காளர் தான் தேர்ந்தெடுத்த பிரதிநிதியின் பணியை ஆராய்து மதிப்பீடு செய்து அதன் அடிப்படையில் அவரது செயல்பாட்டை பற்றி ஒரு அறிவார்ந்த முடிவை எடுக்கும் ஆற்றலை ஒரு குடிமகன் பெற்றிருப்பதாகும். இவ்வாறு மதிப்பீடு செய்ய குடிமக்களுக்கு தேவையான தகவல்கள் எளிதில் கிடைக்க வேண்டும்.

-- Dr. **மன்மோகன்சிங்**
பாரத பிரதமர்

தகவல் உரிமை பெறுவது ஒரு உரிமை மட்டுமல்ல ஒவ்வொரு குடிமகனின் கடமையும் கூட

-- திரு. **ஜேம்ஸ் மேடிசன்**
(அமெரிக்க அரசியலமைப்புச்சட்டத்தை உருவாக்கியவர்)

நம் நாட்டின் அரசின் திட்டங்கள், செயல்பாடுகள் ஒவ்வொரு குடிமக்களுக்கும் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் இன்றைய இந்தியாவில் சிலர் அறிவுசார்ந்த உலகத்திலும் பலர் என்ன நடக்கின்றது என்று தெரியாமலும் இருக்கின்றார்கள் ஒரு நாடு வளர்ச்சி அடைய வேண்டுமானால், அந்த நாட்டின் குடிமக்கள் அனைவரின் பங்களிப்பு இருந்தால்தான் முடியும். அதற்காக உருவாக்கப்பட்டது தான் எளிமையான அதிலும் வலிமையான சட்டம் **“தகவல் அறியும் உரிமை சட்டம்”** இதை எப்படி பயன்படுத்துவது என்று மிக விளக்கமாகவும் எளிமையாகவும் விளக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் பல்வேறு தகவல்களை உதாரணமாகவும் இந்திய தண்டனைச்சட்டம், **மனித உரிமைகள்**, நமது மாநிலங்கள் நமது மாவட்டங்கள் அமைச்சர்கள் அதுமட்டுமல்ல சட்டமன்ற உறுப்பினர்களின் மின் அஞ்சல் கூட……. இத்தனை செய்திகளையும் தொகுத்தது மிக பெரிது. அதுவும் மனிதன் என்பதற்கு அர்த்தமே தனக்காக வாழாமல் பிறருக்காக வாழ்வதுதான். இந்திய குடிமகனுக்கான கடமையுணர்வு கொண்ட ஒரு தேசியவாதியாக மக்கள் அனைவருக்கும் பயன்படும் வகையில் **“தகவல் வழிகாட்டி”** தொகுத்த அருமை நண்பர் **கே.வி. துரை** அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவரின் மிக சிறந்த சேவைக்கு நேரு யுவ கேந்திரா சார்பில் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்புடன்

(கே. ஜவஹர்)

30, ஆசாத் தெரு, காந்தி நகர், அண்ணா பேருந்து நிலையம் அருகில், மதுரை – 20.
தொலைபேசி: (0452) 2539237, E-mail: rcnyksmadurai@yahoo.co.in